# மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், தேவகோட்டை

O.S.No.90/2022

| | | |
|---|---|---|
| வாதி / பிரதிவாதி தரப்பு சாட்சி | : | வாசா.1 |
| பெயர் | : | கணேசன் |
| தகப்பனார்/கணவர் பெயர் | : | வேலு |
| தொழில் | : | |
| கிராமம் | : | |
| தாலுகா | : | |

2026 ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 25 ம் நாள் புதன்கிழமை 1872 ஆம் ஆண்டு இந்திய சாட்சிய சட்டத்தின்படி பெஞ்சு கிளார்க் திரு.ரா.நாகநாதன் என்பவரால் ஆணையிட்டு உறுதி கூறி சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டது.

சாட்சியின் ஆதார் அட்டை சரிபார்க்கப்பட்டது.

**<u>முதல் விசாரணை:</u>**

நான் இந்த வழக்கின் வாதி ஆவேன். வாதி தரப்பு 1வது சாட்சி ஆவேன். எனது தரப்பு சாட்சியை எழுத்துமூலமாக நிருபணவாக்குமூலத்தின் பேரில் நீதிமன்றத்தில் சமர்பிக்கிறேன். அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான்.

<u>முதல் விசாரணை:</u>

1. தாவாச் சொத்தை காட்டக்கூடிய மாதிரி வரைபடம் நகல் – **வா.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது.
2. உமையாள் தாவாச் சொத்திற்கான 1396, 1397, 1400–ம் பசலிக்கு செலுத்திய வரி ரசீது – அசல் – **வா.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது.
3. 14.07.2005 ம் தேதியிட்ட உமையாள் வாதிக்கு எழுதிக் கொடுத்த கிரைய ஆவணம் – அசல் – **வா.சா.ஆ.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது.
4. 06.08.2008 ம் தேதியிட்ட உமையாள் வாதிக்கு எழுதிக் கொடுத்த

இனாம் செட்டில்மெண்ட் பத்திரம் – அசல் – **வா.சா.ஆ.4** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

5. வாதி பெயரில் உள்ள கணினி பட்டா – அசல் – **வா.சா.ஆ.5** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**முதல் விசாரணை தொடர்ச்சி:**

வாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க மேலும் ஆவணங்கள் குறியீடு செய்வதற்கு முதல் விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.

PREMI R

Digitally signed by PREMI R
Date: 2026.02.25 17:04:05 +0530